**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP 19 /2021</u>**

| | | |
|---|---|---|
| **Name** | : செங்கோட்டுவேல் | : |
| **Father Name** | : லேட்.ராமசாமி | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2024**

<u>குறுக்கு விசாரணை (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு)</u>

விபத்தில் இறந்துபோனவர் எனது தந்தையார் ஆவார். விபத்து 05.05.2021 தேதியில் மாலை 6 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரே ஒரு ரோடு இருந்தது. மெயின் ரோட்டிலிருந்து அந்த ரோடு கட் ஆகி செல்கிறது. அந்த குறுக்கு ரோட்டிலிருந்து என் தகப்பனார் மெயின் ரோட்டுக்கு திடீரென என வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் தகப்பனார் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் என் தகப்பனாருக்கு கிடையாது என்றால் சரிதான். என் தகப்பனார் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் தலைக்கவசம் அணிந்து கொள்ளாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து பஸ் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. பஸ் டிரைவர் தான் பேருந்தை வேகமாக ஓட்டியிருக்கிறார். என் தகப்பனார் மாதம் ரூ.25,000/– சம்பாதித்தார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகப்படியானது என்றாலும் அவ்வாறு கோருவதற்கு எனக்கு எந்த தார்மீக அடிப்படையும் முகாந்திரமும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பிரமாண வாக்குமூலத்தில் உண்மைக்கு புறம்பான சில

சங்கதிகளை சொல்லியிருக்கிறேன் என்றாலும் எனவே என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.

Sd/-S.Indulatha, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.